ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1870/8 - 2014 ජූලි මස 07 වැනි සඳුදා - 2014.07.07

*1870/8 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாணத்தின் மாகாண சபை

*ஊவா மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, ஆரம்பப் பிள்ளைப் பருவ நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் 2014, யூன் மாதம் 19 ஆம் திகதி சம்மதிக்கப்பட்டு 2014, யூலை மாதம் 07 ந் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்காக ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச்சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,*
*செயலாளர்,*
*ஊவா மாகாணத்தின் மாகாண சபை.*

*ஊவா மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,*
*இராஜ வீதி,*
*பதுளை.*
*2014.06.27.*

### ஊவா மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, ஆரம்பப் பிள்ளைப் பருவ நியதிச் சட்டம்

*நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், கல்வி, உள்ளூராட்சி, கலாசார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாடு, கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு*

### ஊவா மாகாணத்தின் மாகாண சபையினது 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஆரம்பப் பிள்ளைப் பருவ நியதிச் சட்ட வரைபாகும்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின 13 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக மாகாண சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டதாக ஊவா மாகாணத்திற்குள் தற்போது செல்லப்படுகின்ற அல்லது எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள பகற் பாதுகாப்பு நிலையங்கள், முன் பள்ளிகள், ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் அல்லது ஐந்து வயதுக்குக் கீழான பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சி அல்லது பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்குடன் நடாத்திச் செல்லப்படுகின்ற நிலையங்களைப் பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் வழிநடாத்துதல் ஆகியவற்றுக்காகவும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களுக்காகவுமான சட்டதிட்டங்களை ஆக்குவதற்கான நியதிச் சட்ட வரைபாகும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



3 - PG 2095

ஊவா மாகாண சபை 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, கொண்ட ஊவா மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ நியதிச் சட்டத்தில் மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்கின்ற நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு பிறப்பிக்கப்படுகிறது.

சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.

1. இந்த நியதிச் சட்டமானது 2014 ஆம் ஆண்டின் இன் 2 ஆம் இலக்க, பிள்ளைப்பருவ அபிவிருத்தி நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன் இதில் இனிமேல் "ஆளுநர்" என அழைக்கப்படுகின்ற ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

பகுதி I

**நோக்கம்**

நோக்கம்.

2. ஒரு பிள்ளையின் ஆரம்பப் பிள்ளைப் பருவமாகக் கருதப்படுகின்ற ஐந்து வயது பூர்த்தியடையும் வரையுள்ள காலப்பகுதியில் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்காகவும், நல்வழி காட்டுதலுக்காகவும் கீழ்க்காணும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பொருத்தமானதும் தகுதியானதுமான சட்டரீதியான நிறுவன ரீதியான மற்றும் நிர்வாக ரீதியானதுமான அமைப்பொன்றை ஏற்படுத்துவது இந் நியதிச் சட்டத்தின் நோக்கமாகும்.

1. உடலுறுப்புகள் மூலமாக அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய மகிழ்ச்சியான, வளமான பாதுகாப்புடன் கூடிய சூழலை ஏற்படுத்துதல்.

2. அன்றாட செயற்பாடுகளினூடாக சிறந்த, பணிவான நடத்தைப் பாங்கினை ஏற்படுத்திக்கொள்வதற்கும் விருப்பமான உரையாடலைப் பழகுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தல்.

3. நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களை பயிற்றுவித்தல் மற்றும் பிள்ளைகளுக்கு உரிய போசாக்குகளை வழங்குதல்.

4. நற்குணங்களை வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ற மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல்.

5. ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு முறையான கல்வி மற்றும் உரிய பாதுகாப்பு வழங்குதல்.

6. பிள்ளைப் பராமரிப்பு மற்றும் உரிமைகளைக் காத்தல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

7. பிள்ளைகளின் மனநிலையையும் ஆளுமையையும் விருத்தி செய்தல்.

8. உடல் வளர்ச்சி மற்றும் திறன் விருத்திக்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.

9. அறிவுபூர்வமான ஆக்கத்திறன்களை விருத்தி செய்தல்.

10. சுற்றாடலை நேசித்தல் மற்றும் அதனூடாக மகிழ்ச்சியுறுவதற்கு,. சூழலை மதிப்பதற்கு மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்கு வழிகாட்டுதல்.

11. சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலை வழங்குதல்.

12. ஒற்றுமையுடன் கருமாற்றப் பழகுவதற்கான சூழ்நிலையை உருவாக்கல்.

13. பிள்ளை, ஆரம்பப் பிள்ளைப்பருவத்தை மகிழ்ச்சியாகவும் களிப்புடனும் கழிப்பதற்கு இடமளித்தல்.

14. இவ் வயதிலுள்ள பிள்ளைகளின் திறன்களைத் தூண்டிவிடல் மற்றும் வலுவூட்டலுக்குப் பொருத்தமான சூழலை உருவாக்குதல்.

15. அவர்களின் எதிர்காலக் கல்விக்காக வலுவான அத்திவாரமிடல்.

## பகுதி II

### நிர்வாகம் மற்றும் மேற்பார்வை

3.(1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இனிமேல் "அதிகார சபை" என அழைக்கப்படும் ஊவா மாகாண ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி அதிகார சபையொன்று தாபிக்கப்படும். *அதிகார சபையை நிறுவுதல்.*

(2) அதிகார சபையின் 1 வது சரத்தினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள பெயரால் மாற்றமடையாத நடைமுறைகளும் பொது முத்திரை ஒன்றைக் கொண்ட கூட்டுத்தாபனமாக வேண்டியதுடன் அப் பெயரினர்ல் அதிகார சபை வழக்கு தொடரவும், அதிகார சபைக்கு எதிராக வழக்கு தொடரவும் வாய்ப்பு உண்டு. *அதிகார சபையின் நோக்கம்.*

(அ) அதிகார சபையின் நோக்கமானது ஊவா மாகாண சபைக்குள் ஆரம்பப் பிள்ளைப் பருவ மீளாய்வு மற்றும் முகாமைத்துவம் என்பன மூலமாக ஊவா மாகாணத்தின் ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வித்துறையை அபிவிருத்தி செய்தலாகும்.

(3) நோக்கத்தை அடைவதற்கான அதிகார சபையால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றலாம். *அதிகார சபையின் கடமைகள்.*

(அ) ஊவா மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்தி தொடர்பில் மேம்படுத்தலுக்கு தேவையான வழிகாட்டலும் உதவி வழங்கலும்.

(ஆ) ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வி நிலையங்களை பதிவு செய்தல் அவற்றின் மீளாய்வும் வழிகாட்டலும்;

(இ) ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து கட்டணம் அறவிடுதல் தொடர்பில் நிபந்தனை விதித்தல்.

(ஈ) ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வி நிலையங்களில் ஆலோசகர்களுக்கான கல்வி தகைமைகளை விதித்தல்;

(உ) ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி நிலையங்களின் ஆலோசகர்களை பயிற்றுதல்;

(ஊ) ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வி நிறுவனங்களில் ஆலோசகர்களை பயிற்றுவிப்பதற்கு தேவையான ஆசிரியர் பயிற்சி நிலையங்களை அமைத்தல் மற்றும் அவற்றில் கல்வி கற்பவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குதலும்;

(எ) ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வியை நவீனமயப்படுத்துவதற்குரிய சேவை கூட்டத் தொடரை நடாத்துதல்;

(ஏ) உள்ளூராட்சி நிறுவனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களை நடாத்தி செல்லப்படும் ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வி நிறுவனங்களின் நிர்வாகம், முகாமைத்துவம் என்பவற்றின் தரங்களை நிர்ணயித்தல்;

(ஐ) ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வி அபிவிருத்தியின் முக்கியத்துவம் தொடர்பில் பிரஜைகளை அறிவுறுத்தல்;

(ஒ) மேலே உறுதி செய்யப்படாதிருந்தும் ஆனால் ஊவா மாகாணத்திற்குள் ஆரம்பப் பிள்ளைப் பராய கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(4) தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியாயமாக தேவைப்படக் கூடிய அதிகாரங்கள் அதிகார சபையிடம் பொறுப்பளித்திருக்க வேண்டியதுடன் கீழ்க் குறிப்பிடப்படுவன உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும். *அதிகார சபையின் அதிகாரங்கள்.*

(அ) அதிகார சபையால் வழங்கப்படும் சேவைக்காக நிதி அல்லது கட்டணம் அறவிடல்;

(ஆ) அதிகார சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நிதி, உபகரணங்களையும் ஏனைய உதவிகளையும் வழங்குதல்;

(இ) அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையாளர்கள் சேவையாற்றுவதற்கான தரங்களையும் அத் தரங்களுக்கு ஒத்திசைவாக உத்தியோகத்தர்களுடையதும் சேவையாளர்களுடையதும் கடமைகளை நிறைவேற்றல், பாராட்டுதல் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(ஈ) அதிகார சபையின் கடமைகளை நிர்வகித்தல் தொடர்பான கட்டளைகளைத் தயாரித்தல்;

(உ) அதிகார சபையின் கடமைகளை நிறைவேற்றத் தேவையான அல்லது உடன் நிகழக் கூடிய ஏற்பாடுகளை மேற்கொள்ளல்;

தகைமையுள்ள அதிகாரியை நியமித்தல்.

4. (அ) ஆளுநர் அவர்களினால் அதிகார சபையின் பெயரால் அல்லது உத்தியோகபூர்வ பெயரால் அல்லது இனிமேல் உரிய "அதிகாரி" என அறிமுகப்படுத்தப்படும் நபர் ஒருவரை தெரிவு செய்தல் வேண்டும்.

(ஆ) இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் ஏற்றுக்கொள்ளக் கூடிய பல்கலைக்கழகமொன்றில், பட்டமொன்றையும் கல்வி தொடர்பான பட்டமொன்றை பெற்றிருத்தல்.

தகைமையுள்ள அதிகாரியின் பொறுப்புக்கள்.

(இ) இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி சம்பந்தப்பட்ட கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டியதுடன் இந் நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளல் உரிய அதிகாரியின் பொறுப்பாகும்.

மேற்பார்வை மற்றும் நிர்வாகம்.

5. (அ) உரிய அதிகாரம் உள்ளவர் இனி வரும் சந்தர்ப்பங்களில் ''செயலாளர்'' என அறிமுகப்படுத்தப்படுகின்ற ஊவா மாகாணத்தின் கல்வி விடயம் பொறுப்பான கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களையும் இனி வரும் சந்தர்ப்பங்களில் "அமைச்சர்" என்று அறிமுகப்படுத்துகின்ற ஊவா மாகாணத்தின் கல்வி விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களுடைய சாதாரணமானதும் விசேடமானதும் கட்டளைகளின் கீழ் கடமையாற்றல் வேண்டும்.

தகைமையுள்ள அதிகாரியின் சேவை காலம்.

(ஆ) 02 ஆம் சரத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உரிய அதிகாரி உயிரிழத்தல், வாபஸ் பெறல்,பதவி விலகல் போன்ற காரணங்களினால் பதவி கைவிடப்படுமாயின் தவிர தனது நியமனத் திகதி முதல் தொடர்ந்து 03 ஆண்டுகளுக்குள் பதவி வகித்தல் வேண்டும்.

(இ) ஆலோசனை குழுவினால் வழங்கக்கூடிய அதிகாரங்களையும் கடமைகளையும் உரிய அதிகாரியால் நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றல் வேண்டும்.

(ஈ) 4(அ) உப பந்தியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உரிய அதிகாரியை அமைச்சர் அவர்களுடைய நிலைப்பாடுகள் மீது பதவி விலக்க வாய்ப்பு உண்டு.

(உ) முதலமைச்சர் அவர்களுடைய இணக்கத்துடன் அமைச்சர் அவர்களால் உறுதி செய்யப்படும் பணிக்கொடையை தனது சேவைக்காக வழங்குதல் வேண்டும்.

(ஊ) உயிர் பிரிதல் அல்லது (02) ஆம் உப சரத்தின் கீழ் பதவி விலக்கப்பட்ட பின்பு, பதவி வகிப்பவரால் அமைச்சர் அவர்களிடம் கடிதமொன்றை சமர்ப்பித்து வாபஸ் பெற்ற பின்பு அப்பதவியானது வெற்றிடம் நிழவும் பதவியாக இணங்காணப்படும்.

(எ) 5(ஆ) உப சரத்தின் கீழ் பதவி விலக்கப்பட்டால் தவிர உரிய அதிகாரியினால் மீளத் தெரிவு செய்வதற்கு தகுதியுள்ளவராதல் வேண்டும்.

(ஏ) உரிய அதிகாரிக்கான பதவியில் வெற்றிடம் நிலவுமாயின் (02) உப பிரிவின் கீழ் நியமிக்கும் வரை அமைச்சர் அவர்களினால் ஆலோசனை குழுவைச் சேர்ந்த ஒருவரை அப்பதவியில் கடமையாற்றுவதற்காக நியமித்தல் வேண்டும்.

தகைமையுள்ள அதிகாரியினால் கடைபிடிக்க வேண்டிய கடமைகள், பணிகள் தத்துவங்கள்.

6. உரிய அதிகாரியால் இனிமேல் "நிலையம்" என குறிப்பிடப்படும் ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி நிலையங்கள், ஆரம்பப் பள்ளிகள், பகற் பாதுகாப்பு நிலையங்கள் அல்லது ஐந்து வயதுக்குக் குறைவான பிள்ளைகளின் உடல் அல்லது உள பாதுகாப்பு அல்லது அபிவிருத்திக்காக ஊவா மாகாணத்திற்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற ஏதேனும் நிலையம் தொடர்பாக, உரிய கீழே குறிப்பிடப்படுகின்ற காரியங்களையும் கருமங்களையும் இந்த நியதிச் சட்டத்தின் வேறு எங்காவது அவரால் நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கும் காரியங்களையும், கருமங்களையும் நிறைவேற்ற வேண்டியதுடன், அக் காரியங்களையும் கருமங்களையும் நிறைவேற்றுவதற்காக அவருக்கு இந் நியதிச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

(அ) மாகாணத்திற்குள் நடாத்தப்படுகின்ற நிலையங்களுக்குள் நியாயமான நேரத்தில் நுழைதல் நடவடிக்கைகள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்தல்.

(ஆ) மத்திய நிலையங்களின் பிள்ளைகளுக்காக புத்தகம் படித்தல் முறை மற்றும் உபகரணம் அறிமுகப்படுத்தல்.

(இ) நிலைய உரிமையாளரிடம் அல்லது அவற்றை நடாத்திச் செல்லுகின்றவர்களிடம் அல்லது அச் சந்தர்ப்பத்தில் அங்கிருக்கும் நிலையத்தின் நிர்வாகக் கடமைகளுடன் தொடர்புடைய யாரிடமாவது எழுத்து மூலமாக அல்லது வாய்மொழியாக கேள்விகளைக் கேட்டல், விளக்கம் பெறல், அறிக்கை மற்றும் தகவல் பெற்றுத்தருவதற்கு பணித்தல்.

(ஈ) யாதாயினும் நிலையத்தைப் பதிவு செய்தல் அல்லது காரணங்களைக் காட்டி பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை நிராகரித்தல்.

(உ) எந்தவொரு நிலையத்தினதும் உரிய ஆவணங்கள், பதிவேடுகள் அறிக்கைகள் மற்றும் கோவைகளைப் பரிசீலித்தல் மற்றும் தேவையேற்படின் தனது பொறுப்பில் வைத்துக்கொள்ளல்.

(ஊ) தேவையான தகுதிகளை உறுதிப்படுத்த தவறிய யாதேனுமொரு நிலையத்தில் கற்பித்தலில் ஈடுபடுகின்றவர்களின் சேவையை இடைநிறுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

(எ) யாதாயினும் ஒரு நிலையத்தில் கற்கும் பிள்ளைகளுக்கு இந் நியதிச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச தகுதியையாவது அடையச் செய்யுமாறு அந்த நிலையத்தை நடாத்திச் செல்லுகின்ற நிறுவனத்திற்கு அல்லது உரிமையாளருக்குப் பணித்தல்.

(ஏ) நடாத்திச் செல்லப்படுகின்ற எந்தவொரு நிலையமும் பரிசீலனையின் பின்னர் இந் நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்கமைய நடாத்திச் செல்லப்படாவிடின் அந் நிலையத்தை நடாத்திச் செல்வதை மூடிவிடுவதற்கு அல்லது இடை நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல்.

(ஐ) நிலையத்தினால் வழங்கப்படும் சேவை வசதிகள் மற்றும் ஆளணியினர் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு அதனை தரப்படுத்துதல்.

(ஒ) நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரிய ஆசிரியைகளுக்கும் ஆளனியினருக்கும் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்துதல், அவற்றில் பங்குபற்றுவதற்கு நிலையங்களின் ஆசிரிய ஆசிரியைகளுக்கும் தொடர்புடைய ஏனையோருக்கும் பணித்தல்.

(ஓ) நிலையங்களில் ஆசிரியர்களுக்காக பயிற்சி பட்டறைகளை நடாத்துகின்ற தனியார் கல்வி நிலையங்களை பதிவு செய்தல், தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் கட்டளை பிறப்பித்தல்.

(ஔ) இந் நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைக்கான ஏதேனும் கட்டணம் ஒன்றை அறவிடுதல்.

(ஃ) நிலையங்களை இடைக்கிடை பரிசீலனைகளுக்கும் மேற்பார்வைகளுக்கும் உட்படுத்துதல்.

(க) நிலையத்தினால் பேணப்பட வேண்டிய அறிக்கைப் புத்தகங்கள் ஆவணங்கள் மற்றும் மாதிரிப் படிவங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துமாறு பணித்தல்.

7. இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளில் ஏதாவதொரு விதிமுறையின் கீழ் தன்னிடம் வழங்கப்படுகின்ற யாதாயினும் அதிகாரங்கள், கடமைகள், காரியங்கள் ஆகியவற்றை அதிகாரியினால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

அதிகாரங்கள் பகிர்தல்.

8. இந் நியதிச் சட்டத்தின் கீழ் தன்னிடம் வழங்கப்பட்டுள்ள அல்லது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள், காரியங்கள் எதனையாவது செயலாளர் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் அதிகாரியினால் ஊவா மாகாண சபையின் அரச சேவையிலுள்ள வேறொரு உத்தியோகத்தரிடம் கையளிக்க இயலும்.

பகுதி III

## ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி நிதியம்

9. ஊவா பிள்ளைபராய கல்வி அபிவிருத்தி நிதியம் என அறிமுகப்படுத்தப்படும் நிதியத்தை அதிகார சபையால் ஸ்தாபிக்க வேண்டியதோடு அதனை ஊவா மாகாண சபையின் தனிப்பட்ட கணக்காக முன்னெடுத்தல் வேண்டும்.

1. (அ) 1987 ஆம் ஆண்டின் இலக்கம் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டமூலத்தின் மூன்றாம் பகுதி ஏற்பாடுகளை இந் நிதியத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

(ஆ) அதிகார சபைக்காக மாகாண சபையால் அவ்வப்போது வழங்கப்படும் அனைத்து வகையான நிதி மற்றும் அதிகார சபையின் கடமைகளையும் அதிகாரங்களையும் நிறைவேற்றும்போது அதிகார சபையினால் பெறப்படும் அனைத்து நிதியையும் அதிகார நிதியத்தில் வைப்பு செய்தல் வேண்டும்.

நிதியத்தை பயன் படுத்த வேண்டிய விடயங்கள்.

2. அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அல்லது இந் நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூலமான சட்டத்தின் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் கடமைகளையும் நடைமுறைப்படுத்தல் அல்லது அடைவு மட்டம் பற்றி கணிப்பீட்டிற்காக ஆலோசனை குழு தீர்மானிக்கின்ற வகையில் பயன்படுத்த முடியும்.

அதிகார சபையின் கணக்கு.

3. ஒவ்வொரு நிதி ஆண்டின் செலவுகள் சார்பாக வருடத்தின் வரவு மற்றும் செலவுகள் பற்றியும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் பற்றியும் சரியான முறையில் கணக்கு வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதோடு அமைச்சர் அவர்களால் விதிக்கப்படும் கட்டளைகள் மூலம் நியமிக்கப்படும் வகையில் உரிய தகவல்கள் உள்ளிட்டு அதிகார சபையுடன் தொடர்புடைய கணக்குகளையும் புள்ளி விபரங்களையும் உட்படுத்தி வருடாந்த கணக்கு அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும்.

அதிகார சபையின் நிதி வருடம் கணக்காய்வு

4. சனவரி மாதம் முதலாம் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை அதிகார சபையின் ஒரு நிதி ஆண்டாக கருதப்படும்.

   1. நிதி ஆண்டு நிறைவு பெற்று 03 மாதங்கள் செல்வதற்கு முன்பு அதிகார சபையின் கணக்குகளை சம்பந்தப்பட்ட நிதி ஆண்டின் கணக்குகளை கணக்காய்வாளரிடம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

   2. கணக்காய்வாளரால் ஒவ்வொரு ஆண்டிலும் மாகாண அதிகார சபையின் கணக்குகளை ஆராய்தல் வேண்டும்.

   3. கணக்காய்வாளரால் அதிகார சபையின் கணக்குகளை பரிசோதித்து கீழ் இடம்பெறும் விடயங்கள் உள்ளிட்ட அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

அவையாவன,

(அ) தனக்கு தேவையான அனைத்து தகவல்களும் கிடைத்ததா இல்லையா என்பது பற்றி,

(ஆ) அதிகார சபையின் நடவடிக்கைகள் பற்றி சரியான, நியாயமான தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அறிக்கையின் கணக்குகளை சரியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி,

(இ) தனது நிலைப்பாட்டிற்கு இணங்க மாகாண சபை கவனம் செலுத்த வேண்டிய ஏதேனும் விடயங்கள் அல்லது அதிகார சபையின் கடமைகள் மற்றும் கணக்குகள் பற்றி சோதனையின் போது வெளியான முக்கிய விடயங்கள்.

5. கணக்காய்வாளரால் அவருடைய அறிக்கையுடன் கணக்காய்வு செய்த கணக்குகளை அதிகார சபையின் தலைவரிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் அதிகாரசபை தொடர்பான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கை அமைச்சருக்கு முன்வைத்தல்.

6. தலைவரினால் சம்பந்தப்பட்ட கணக்காய்வு அறிக்கை கிடைத்த பின்பு அவ்அறிக்கையையும் சம்பந்தப்பட்ட நிதி ஆண்டிற்குள் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையையும் அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டியதோடு அமைச்சர் அவர்களால் கணக்குகளுக்கு தேவையான நிதியை நிதி ஆண்டு நிறைவு பெற்று பண்ணிரெண்டு மாதங்கள் செல்வதற்கு முன்பு அவற்றின் பிரதிகளை அமைச்சரவையிலும் மாகாண சபையிலும் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பகுதி IV

**ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி பற்றிய ஆலோசனை குழுக்களை நிறுவுதல்**

10. கீழ்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கிய இனிமேல் "ஆலோசனைக்குழு" என அழைக்கப்படும் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான குழுவொன்றை ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படல் வேண்டும். ஆலோசனை குழுவை நியமித்தல்.

(அ) ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் குழுவிற்கு இனிமேல் அதிகார பூர்வமாக நியமிக்கப்படும் அங்கத்தினர்கள் என அழைக்கப்படும். அங்கத்தினர்கள்.

1. குழுத் தலைவராக வேண்டிய ஊவா மாகாண கல்வி விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளரிடம்,

2. ஊவா மாகாண கல்விப் பணிப்பாளரிடம்,

3. ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம்,

4. ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளரிடம்,

5. ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரிடம்,

6. ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளரிடம்,

7. குழுவின் செயலாளராக வேண்டிய உரிய அதிகாரியிடமும்-

(ஆ) இனிமேல் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தினர்கள் என அழைக்கப்படும்.

1. தேசிய சிறுவர் செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளரினால் விதந்துரைக்கப்படும் ஒரு பிரதிநிதி,

2. ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரினால் விதந்துரைக்கப்படும் சிங்களம், தமிழ் இரு ஆசிரியைகள்

3. பதுளை மற்றும் மொணராகலை மாவட்டச் செயலாளர்களினால் அவ்விரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் விதந்துரைக்கப்படும் ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி விடயம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் தொண்டர் (சுயேட்சை) நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் (மாவட்டத்துக்கு ஒருவர் வீதம்) இருவர்.

4. அமைச்சரினால் விதந்துரைக்கப்படும் முன் பிள்ளைப் பருவ விடயம் தொடர்பாக நன்கு பரிச்சயமுடைய இரு பிரதிநிதி.

5. சட்டத்துறையில் அனுபவம் அல்லது தகுதியுள்ள இன்றேல் ஆர்வம் காட்டும் ஒரு நபர் என்ற வகையில் பெயரிடப்படும் அங்கத்தினர்களைக் கொண்டதாக அமைய வேண்டும்.

11.(1) அதிகார தோரணையில் நியமிக்கப்படுகின்ற அங்கத்தினர்களிலிருந்து ஆலோசனைக் குழுவின் தலைவராக ஊவா மாகாணத்தின் கல்விக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அமைய வேண்டும். ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்படுகின்ற தகுதியும் பொருத்தமும் உடைய ஒருவர் இக் குழுவின் செயலாளராதல் வேண்டும். குழு தவிசாளர் மற்றும் செயலாளர்.

(2) ஆலோசனைக் குழுவின் ஆயுட்காலம் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆயுட்காலம்.

(3) ஆலோசனைக் குழு கூட்டத்தின் பெரும்பான்மை ஏழு அங்கத்தினர்களைக் கொண்டு அமைய வேண்டும். ஆலோசனைக் குழுவின் நடப்பு எண்கள்.

(4) பெயரிடப்பட்ட அங்கத்தினர் ஒருவர் இறந்துவிட்டால், இராஜினாமாச் செய்தால் அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது முன்பதாக பதவி துறந்தால் அன்றி மூன்றாண்டு காலம் பதவி வகித்தல் வேண்டும். அங்கத்தவர்களின் பதவிக் காலம்.

பதவி வறிதாதல்.

(5) பெயரிடப்பட்ட ஓர் அங்கத்தினர் ஆலோசனைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமொன்று இல்லாது, அறிவிக்காது தொடர்ச்சியாக மூன்று குழுக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காதுவிட்டால் குறித்த அங்கத்தினர் பதவியை விட்டுச் சென்றதாகக் கருதப்பட வேண்டியதுடன், குழுச் செயலாளரினால் அது குறித்து ஆளுநர் அவர்களுக்கு அறிவித்த பின்னர் அதற்குத் தகுதியுடைய பதிலாள் ஒருவர் ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படல் வேண்டும்.

பதவியிலிருந்து விலக்கல்.

(6) ஆளுநர் அவர்களால் எச் சந்தர்ப்பத்திலும் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினர் ஒருவரை எழுத்துமூல அறிவித்தல் வழங்கியதன் பின்னர் பதவியிலிருந்து நீக்கப்பட இயலும்.

பதவியை இராஜினாமா செய்தல்.

(7) பெயரிடப்பட்ட அங்கத்தினர் ஒருவர் தான் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக ஆளுநர் அவர்களுக்கு எழுத்துமூல அறிவித்தலொன்றை சமர்ப்பிக்க இயலுமாதலுடன், அந்த இராஜினாமாவை ஆளுநர் ஏற்றுக்கொண்டால் தனது பதவியை இராஜினாமா செய்ய இயலும்.

(8) ஓர் அங்கத்தினர் இறந்து போவதால் இராஜினாமா செய்வதால், பதவி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது வேறு யாதேனும் காரணத்தினால் பதவி வெற்றிடம் ஒன்று ஏற்படும் வேளையில் ஆளுநர் அவர்களால் 7(1) (ஆ) ஆம் பந்தியின் விதிமுறைகளைக் கருத்தில் கொண்டு அவ்அங்கத்தினருக்கு பதிலாக வேறொருவரை நியமிக்க வேண்டும். அவ் அங்கத்தினருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட யாராயினும் பதிலாள் ஒருவரினால் தனக்கு முந்தியவரின் பதவிக் காலத்தில் எஞ்சியிருக்கும் காலத்துக்கு மாத்திரம் பதவி வகிக்க வேண்டும்.

(9) இக் குழுவின் அங்கத்தினராக ஒரு முறை பெயரிடப்பட்ட ஒருவர் மீண்டுமொரு முறை அங்கத்தினராக பெயரிடப்பட இயலுமாதல் வேண்டும்.

ஆலோசனை குழுவை நிர்வகித்தல்.

12.(1) நியதிச் சட்டத்தின் வேறும் விதிமுறைகளுக்கு இணங்க இக்குழுவை செயற்படச் செய்வதற்கான நடைமுறைகளை ஆலோசனைக் குழு தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

ஆலோசனை குழுவை கூட்டல்.

(2) ஆலோசனைக் குழு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தரமாயினும் கூட வேண்டும்.

ஆலோசனை குழுவின் உறுப்புரிமைக்கு தகுதியற்றவர்.

13. யாராயினும் ஒரு நபர்,

(அ) இலங்கை பிரசை அல்லாதுவிடின் அல்லது பிரசையாயிருத்தல் நிறுத்தப்படின், அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வேறொரு நாட்டில் நிலவுகின்ற யாதாயினும் ஒரு சட்டத்தின் கீழ் புத்தி சுயாதீனம் அற்றவர் என அல்லது வங்குரோத்து நிலைக்கு ஆளானவர் என தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்,

(இ) இலங்கையின் அல்லது வேறொரு நாட்டின் நீதிமன்றம் ஒன்றினால் விதிக்கப்படும் சிறைத் தண்டனையை அனுபவிப்பவராயிருந்தால் அல்லது ஏற்கனவே அனுபவித்திருந்தால் அல்லது,

(ஈ) ஓர் ஆலோசனைக் குழு அங்கத்தினராக அவரால் அவரது கருமங்களை ஆற்றும்போது பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய யாதாயினும் நிதிசார்ந்த அல்லது வேறு தொடர்பினைக் கொண்டிருக்கிறார் என ஆளுநர் கருதினால் அல்லது,

(உ) இந் நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு குற்றத்திற்கு குற்றவாளி ஆக்கப்பட்டால் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது நடவடிக்கை மேற்கொள்வதற்கு தகுதியற்றவராதல் வேண்டும்.

14. ஆலோசனைக் குழுவின் நடவடிக்கைகள் தீர்மானம் அல்லது சட்ட கடமைகள் குழுவின் வெற்றிடம் ஒன்றோ எவரேனும் அங்கத்தவர் நியமனம் தொடர்பில் தவறுகள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக செயலிழந்ததன் காரணமாக தகாது

15. ஆலோசனை குழுவின் உறுப்பினர்களுக்கு ஆளுநர் அவர்களின் அனுமதியுடன் முதலமைச்சர் அவர்களினால் உறுதி செய்யப்படும் பணிக் கொடையை செலுத்த முடியும்.

16. ஆலோசனைக் குழுவினால் கீழ்க்காணும் கருமங்களும் காரியங்களும் நிறைவேற்றப்பட வேண்டும். ஆலோசனை குழுவின் கடமைகளும் பணிகளும்.

(அ) ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்தி கல்வியின் தரத்தை மேம்படுத்த தேவையான ஆலோசனை களும் வழிகாட்டலும்.

(ஆ) நிலையங்கள் தொடர்பாக உரிய கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்வதற்கு மற்றும் அவற்றை அமுல்படுத்துவதற்குரிய கட்டளைகளை தயாரித்தல் மற்றும் அக் கட்டளைகளை அமைச்சருக்கு சமர்ப்பித்தல்.

(இ) நிலையங்களின் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து பிரிவுகளினாலும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை இனங்காணல் மற்றும் அவை சம்பந்தமான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல், ஆலோசனை வழங்குதல், மீளாய்வு செய்தல், மேற்பார்வை செய்தல் அதற்கான ஆலோசனைகளை இடைக்கிடை வழங்குதல்.

(ஈ) ஊவா மாகாண சபையின் அதிகார எல்லைக்கு அமைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட நிலையங்களின் செயற்பாடுகளை மேற்பார்த்தல், நிலையங்களின் பாடங்களுக்குரிய பாடவிதானங்களை தீர்மானித்தல், மாற்றங்களுக்கு உட்படுத்துதல் மற்றும் அதற்கான வேறு கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளல்.

(உ) அபிவிருத்தி நிலையங்களில் ஆசிரியர்களுக்குரிய ஆகக் குறைந்த கல்வி தகைமைகளை நிர்ணயித்தல்;

(ஊ) விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளை அடையாளம் கண்டு அவர்களுக்குப் பொருத்தமான வருங்கால கல்வித் திட்டங்களைத் தயாரித்தல், அவ்வாறான பிள்ளைகளின் பெற்றாரை அறிவுறுத்தல், பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தேவையான வேலைத்திட்டங்களைத் தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(எ) நிலையங்களைப் பதிவுசெய்தல் தொடர்பாக கிடைக்கப்பெறும் மேன்முறையீடு சம்பந்தமாக பரிசீலனை செய்து உரிய அதிகாரிக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்;

(ஏ) இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற, நடாத்திச் செல்கின்ற நிலையங்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானித்தல்.

(ஐ) இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரிய அதிகாரிக்கு பொருத்தமான ஆலோசனைகளை வழங்குதல்.

(ஒ) ஆரம்பப் பிள்ளைப் பராய விடயம் தொடர்பான மாகாணத்திற்குள் உறுத செய்யப்பட்ட கடமைகளை நிறைவேற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுடைய பொறுப்புகள் தொடர்பான நடவடிக்கைகளை தீர்மானித்தல்.

(ஓ) இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் பற்றி உரிய அதிகாரிக்கு தேவையான சந்தர்ப்பங்களில் ஆலோசனை வழங்கல்.

17. ஊவா மாகாணத்தின் அனைத்து நிலையங்களிலும் பயன்படுத்த வேண்டிய பாடநெறியொன்றினை தேசிய கல்வி நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக ஆலோசனைக் குழுவினால் தயாரிக்கப்பட வேண்டுவதுடன், குறித்த பாடநெறி அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் மாகாணத்தின் அனைத்து நிலையங்களிலும் அமுல்படுத்தப்பட வேண்டும். பொது பாடத் திட்டங்களை தயாரித்தல்.

## பகுதி V

### ஆரம்ப பிள்ளைப் பராய கல்வி நிலையங்களுக்கான தராதரங்கள்

18.(1) ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்தி நிலையங்களை புதிதாக ஸ்தாபிக்கும் போதும் நடைமுறையில் உள்ள அவ்வாறான நிலையங்களை மீளமைப்பதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் தராதரங்களை நிர்ணயிக்கப்படும். நிலையங்களில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த வசதிகள்.

(அ) நிலையம் அமைந்துள்ள பூமி ஆபத்தினையும் அனர்த்தத்தையும் தவிர்ந்த பூமியாக இருத்தல்.

(ஆ) ஒரு பிள்ளைக்காக குறைந்தபட்சம் பத்து சதுர அடிகளைக் கொண்ட இடப்பரப்பு ஒதுக்கப்பட்டிருத்தல்.

(இ) இருபத்தைந்து பிள்ளைகளுக்கு ஒன்று வீதம் நீரடைப்பு மலசலகூடத் தொகுதியொன்று அமைக்கப்பட்டிருத்தல்.

(ஈ) கட்டடத்தின் தரை சீமெந்து அல்லது அதுபோன்ற நிலையான மேற்பரப்பினைக் கொண்டதாக இருப்பதுடன் அறையினது பரப்பளவின் 1/7 (ஏழில் ஒன்று) அளவிலான காற்று உள்வரக்கூடியதாக கதவு யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் மற்றும் இங்கு மின் உபகரண கருவிகளை மிகவும் பாதுகாப்பான முறையில் பொறுத்தி வைத்தல்.

(உ) பாதுகாப்புச் சுவரினால் அல்லது பாதுகாப்பு வேலியினால் நிலையத்திற்குரிய காணி நன்கு பாதுகாக்கப்பட்டிருத்தல், பிள்ளைகளின் பாதுகாப்பிற்கான வேலைத்திட்டம் ஒன்றை பேணப்படல் அவசியம்.

(ஊ) அதிகாரியின் ஆலோசனைப்படி முதலுதவிப் பெட்டியொன்று பேணப்படுதல், அவ் உபகரணங்களையும் மற்றும் கருவிகளையும் தகுந்த முறையில் மற்றும் சுகாதார பாதுகாப்பான திட்டமொன்றை மேற்கொள்ளல்.

(எ) ஒவ்வொரு நிலையத்திலும் விளையாடுவதற்காக போதியளவு இடமுள்ள முற்றமொன்று இருத்தல் அல்லது பிள்ளைகளுடைய செயற்பாடுகளை மேம்படுத்த போதியளவில் விளையாட்டு உபகரணம் மற்றும் பொருட்கள் வைத்திருத்தல்.

(ஏ) சுத்தமான குடிநீர் மற்றும் வேறு தேவைகளுக்காக போதியளவு நீர் வசதி இருத்தல்.

(ஒ) ஒவ்வொரு நிலையத்திலும் சாதாரண மாணவர்களுக்காக 20:1 (இருபதுக்கு ஒன்று) என்ற விகிதாசாரப்படியும், விஷேட பிள்ளைகளுக்காக 5:1 (ஐந்துக்கு ஒன்று) என்ற விகிதாசாரப்படியும் ஆசிரிய ஆசிரியைகளைப் பயன்படுத்துதல்.

(ஓ) ஒவ்வொரு நிலையத்திலும் காணி அல்லது வீட்டுத் தோட்டம் மனதைக் கவரக்கூடியதாக அமைக்கப்பட்டிருத்தல் மற்றும் அதிகாரி நிர்ணயிக்கும் விதத்தில் அடிப்படை விளையாட்டு வசதிகளைக் கொண்டதாக இருத்தல்.

(ஔ) போதியளவிலான மரத் தளபாடங்கள் இருத்தல் மற்றும் அவை பிள்ளைகளின் உள உற்சாகத்திற்கு ஏற்ற வகையில் மனங்கவர் பார்வைக்குரியனவாக பராமரித்தல்.

(ஃ) சமய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான இடமொன்று அமைக்கப்பெற்றிருத்தல்.

(2) தீங்கு விளக்கக் கூடிய அல்லது ஆபத்து ஏற்படுத்தக்கூடிய சுற்றாடலுக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற அல்லது அவ்வாறான இடத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்திற்குள்ளான பிரதேசத்தில் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் கூடாது.

*நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் முன் நடைமுறையிலுள்ள மத்திய நிலையங்களின் தராதரங்கள்.*

19.இந் நியதிச் சட்டம் அமுலுக்கு வரும் திகதிக்கு முன்பிருந்தே மாகாணத்துக்குள் இயங்கி வரும் ஒவ்வொரு நிலையத்தையும் இந்த நியதிச் சட்டம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள் மேலே 17 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களுக்கு அமைவாக நடாத்திச் செல்வதற்கு அந்த நிலைய உரிமையாளர்கள், நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*நிலையம் தொடர்பான கட்டளைகளை தயாரித்தல்.*

20.நிலையமொன்றை நடாத்தி செல்லும் அல்லது நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சூழலில் நடாத்திச் செல்லப்படும் வசதிகளின் தரம் பற்றி கட்டளைகள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

பகுதி VI

**நிலையங்களைப் பதிவு செய்தல்**

*21.* இந் நியதிச்சட்டம் அமுலுக்கு வந்த பின்பு, இதுவரை ஏதேனும் ஒரு முறையில் ஊவா மாகாணத்திற்குள் நடாத்திச் செல்லப்படும் நிலையங்களை பதிவு செய்தல்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டவைகளாக கருதப்படுவதுடன் அச் சகல நிலையங்களையும் அதிகார சபையின் கீழ் மீள பதிவு செய்தலுக்காக கோரல் வேண்டும். அனைத்து நிலையங்களும் மீண்டும் பதிவு செய்து கொள்ளல்.

*22.* இந் நியதிச் சட்டம் அமுலுக்கு வந்த நாள் முதலும் அதனை தொடர்ந்து இந் நியதிச் சட்டம் வெளியிடப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ் அதன் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஒத்திசைவானது தவிர எவரேனும் ஒருவர் ஆரம்ப பிள்ளைப் பராய அபிவிருத்தி நிலையமொன்று அல்லது பகற் பாதுகாப்பு நிலையமொன்று அல்லது முன் பள்ளியொன்று அல்லது ஐந்து வயதிற் குறைந்த பிள்ளைகளின் உடல், உள அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்காக நடாத்திச் செல்லப்படுகின்ற யாதாயினும் நிலையமொன்றை நடாத்திச் செல்லவோ அல்லது தாபிக்கவோ இயலாது. அனுமதி பத்திரம் பெற்றுக்கொள்ளல்.

*23.* இந் நியதிச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூன்று மாதங்கள் முடிவடையும் முன்னர், அத் தருணத்தில் மாகாணத்திற்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற ஒவ்வொரு நிலையத்தினதும் உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது நிர்வாகி குறித்த நிலையத்தை பட்டியலில் உள்ளடக்குமாறு உரிய அதிகாரியிடம் கோரிக்கைவிட வேண்டும். மூன்று மாதங்களுக்குள் விண்ணப்பித்தல் வேண்டும்.

*24.* இந் நியதிச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அவ்வாறு மூன்று மாதங்களுக்குள் மேலேயுள்ள 21 ஆம் பந்திக்கமைய விண்ணப்பிக்கத் தவறிய யாராயினும் உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது நிர்வாகியினால், ஏற்றுக்கொள்ளக் கூடியதெனவும் நியாயமானதெனவும் பார்த்த பார்வைக்குத் தெரியும் காரணங்களுடன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் கடந்துபோன காலத்தைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரியினால் யாதேனும் மேலதிக கட்டணத்தை அறிவிட்டதன் பின்பு பட்டியலுக்கு உட்படுத்த இயலும். தாமதித்து விண்ணப்பித்தல்.

*25.* இந் நியதிச் சட்டம் அமுலுக்கு வந்ததன் பின்பு புதிதாக ஆரம்பிக்கப்படும் நிலையங்கள், ஆரம்பிப்பதற்கு முன்னராகவே உரிய அதிகாரியிடம் கோரப்பட்டு பதிவுசெய்தல் வேண்டும். புதிய நிலையங்களை பதிவு செய்தல்.

*26.* (1) பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பதாரி உரிய அதகாரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

(2) பதிவு செய்வதற்கு தேவையான தகுதிகள் மற்றும் தேவைகள், உரிய படிவங்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பாக உரிய அதிகாரியினால் காலத்துக்குக் காலம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

(3) ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்திக்கான பாடநெறிகளை அல்லது பயிற்சி பட்டறைகளை நடாத்தப்படும் மாகாணத்திற்குள் உள்ள ஏதேனும் தனியார் நிறுவனம் ஒன்று கட்டளைகளில் விதிக்கப்பட்டுள்ளவாறு உரிய அதிகாரியிடம் பதிவு செய்தல் வேண்டும்.

(4) பதிவு செய்துகொள்ளும் காலத்தை நீடிப்பதற்கும் பதிவு செய்வதற்கும் தாமதிக்கும் காலத்திற்கும் மேலதிகக் கட்டணமொன்று அல்லது தண்டப்பணம் அறவிடுவதற்கும் உரிய அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

*27.* (1) மாகாணத்திற்குள் ஐந்து வயதுக்கு குறைவான பிள்ளைகளுக்காக ஏதாயினும் ஒரு வகையில் கல்வி நடவடிக்கைகளை நிறைவேற்றும் நோக்குடன், இந் நியதிச் சட்டம் அமுலுக்கு வரும் திகதி வரை நடாத்திச் செல்லப்படுகின்ற ஒவ்வொரு நிலையமும் இந் நியதிச் சட்டத்தின் காரியங்களுக்காக ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையமாக அல்லது பகற்பாதுகாப்பு நிலையமாக கருதப்படும்.

(2) சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வருகின்ற விஷேட பிள்ளைகளான ஐந்து வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்காக நடைபெறும் பகற் பாதுகாப்பு நிலையங்களும் நன்னடத்தைத் திணைக்களத்தின்கீழ் உள்ள ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களும் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

*28.* உரிய அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை மற்றும் (22) ஆம் உப பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவல் ஒன்றை ஆவணம் ஒன்றை கவனத்திற் கொண்ட பின்பு–

(அ) நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்கு தேவையான தகைமை விண்ணப்பதாரரின் பொறுப்பில் இருப்பதுடன் மற்றும்

(ஆ) நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுகின்ற அல்லது நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சூழல் (17) வது சரத்தின் கீழ் விதிக்கப்படும் வசதிகளின் தராதரங்களுக்கு ஒத்திசைவானது என திருப்தி அடைய முடியுமாயினும் மாத்திரம் அவரினால் விண்ணப்பதாரியை பதிவு செய்வதற்கு வாய்ப்பு உண்டு.

*29.* இந் நியதிச் சட்டத்தின் விதிமுறைகளை மீறி யாதாயினுமொரு நிலையத்தை ஆரம்பிக்கும் அல்லது நிலையத்தை நடாத்திச் செல்லுகின்ற யாராயினும் ஒரு நபர் இந் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாவதுடன், அக் குற்றத்தைச் செய்கின்ற ஒவ்வொரு மாதத்திற்கும் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு உட்படுவார். எவ்வாறாயினும் அந் நபர் அக்குற்றத்தைத் தொடர்ந்து செய்வாராயின் ஆறு மாதங்களுக்குள் நியதிச் சட்டத்தின் 48 ஆவது விதிப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

*பதிவு செய்தலை நிராகரித்தல்.*

*30.* இந் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையம் அல்லது ஆரம்பப் பள்ளி அல்லது பகற்பாதுகாப்பு நிலையம் என்ற பெயரில் நடாத்திச் செல்லப்படுகின்ற ஏதாவதொரு நிறுவனம் நியதிச் சட்டத்தின் விதிமுறைகளைகளுக்கு உட்படாததாயின் உரிய அதிகாரியினால் அது பற்றிய காரணங்களைக் காட்டி பதிவு செய்தலை நிராகரிக்கப்பட இயலும்.

(1) அவ்வாறாக நிராகரிக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு நிராகரிக்கப் பட்டமைக்கான காரணத்தை பதிவு செய்வதற்காக மனு செய்யப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாதத்திற்குள் மனுச் செய்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு அல்லது முகாமையாளருக்கு அல்லது விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

(2) அவ்வகையான நிராகரிப்பு இடம்பெற்ற போது குறித்த நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது முகாமையாளரினால் அது குறித்து செயலாளருக்கு பத்து தினங்களுக்குள் மேல் மனு செய்யவியலும்.

(3) அவ்வாறான மேலும் மனுவொன்று கிடைக்கப்பெற்ற வேளையில் செயலாளரினால் ஆலோசனைக் குழுவிடம் அதனை சமர்ப்பித்து ஆலோசனைக் குழுவின் பரிசீலனை மற்றும் சிபார்சைப் பெற்று அந்த மேல்மனு தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டும்.

(4) நிலையத்தைப் பதிவு செய்தல் சம்பந்தமாக ஆலோசனை குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இறுதியானதாக வேண்டும்.

*பதிவேடு, பதிவுச் சான்றிதழ் மற்றும் இலக்கம்.*

*31.(1)* உரிய அதிகாரியினால் இந் நியதிச் சட்டம் அமுலாகும் தினம் வரையும் நிலையங்களாக நடாத்திச் செல்லப்பட்டு இந் நியதிச் சட்டம் அமுலுக்கு வந்த தினத்தின் பின்னர் நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்கிணங்க பதிவுசெய்யப்பட்ட மற்றும் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்த தினத்தின் பின்னர் பதிவுசெய்யப்பட்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிலையங்கள் தொடர்பில் பதிவு பட்டியலொன்று, குறித்த நிலையங்களின் முகவரிகள், நிலையங்களை நடாத்திச் செல்கின்ற நபர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேவையென உரிய அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் விபரங்களையும் உள்ளடக்கியதாகப் பேணப்பட வேண்டும்.

(2) உரிய தராதரத்தினைக் கொண்ட ஒவ்வொரு நிலையமும் உரிய அதிகாரியினால் பதிவுசெய்யப்பட வேண்டும் என்பதுடன் அதற்கான இலக்கத்துடன் கூடிய ஒரு சான்றிதழ் வழங்கப்பட வேண்டியதுடன், அவ் நிலையமொன்றை நடாத்திச் செல்லல் அல்லது நடாத்தப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ள இடத்தை எந்த வேளைகளிலும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

(3) குறித்த சான்றிதழானது இச் சட்டத்தின் காரியங்களுக்கான செல்லுபடியாகும் சட்டரீதியான ஓர் ஆவணமாக கருதப்படல் வேண்டும்.

(4) இவ் நியதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட சான்றிதழை வேறு எவரேனும் ஒருவரிடம் பொறுப்பளிப்பது தகாததுடன் அவ்வாறான பொறுப்பளிப்பொன்று செயலிழந்தாக கருதப்படும்.

பகுதி VII

**நிலையங்களின் வளநபர்களுக்குத் தேவையான தகைமைகள் மற்றும் பயிற்சிகள்**

32.(1) நிலையமொன்றில் சேவையாற்ற தேவையான குறைந்த பட்ச கல்வி தகைமைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு இருக்குமாயின் தவிர அச்சேவைக்காக தெரிவுசெய்வதற்கு தகுதியுடையவராதல் தகாது.

(2) இந் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்தில் நிலையங்களிலுள்ள பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்கு, அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தும் காரியத்தில் ஈடுபட்டுள்ள - இனிமேல் "வளவாளர்கள்" என அழைக்கப்படும் ஆசிரிய ஆசிரியைகள், ஆலோசகர்கள் நிர்வாகிகள், உதவியாளர்கள் உட்பட அக் காரியாலயத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும் குறைந்தபட்சம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் தாய் மொழி, கணிதம் உட்பட்ட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தலுடன் ஆலோசனைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்பட்ட ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கல்வி தொடர்பிலான பயிற்சி நெறியை பயின்றிருத்தல் வேண்டும். வள நபர்களின் கல்வி தகைமைகள்.

(3) நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்தின் பின்னர் ஆரம்பிக்கப்படும் நிலையங்களில் சேவையாற்றுகின்ற வளவாளர்கள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உ/தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

33. இந் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று நடாத்திச் செல்லப்பட்ட நிலையங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த வளநபர்கள் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் மேற்கூறப்பட்ட தகைமையை பூர்த்தி செய்யாதிருத்தல் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்த தினத்திலிருந்து இரண்டு வருடங்களில் குறித்த பரீட்சையில் சித்தியடைதலுடன் அதிகாரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படுகின்ற ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான கற்கை நெறியொன்றினை பயின்று சித்தியடைய வேண்டும். தகைமைகளை பூர்த்தி செய்யத் தரப்படும் காலம்.

34. மேற்குறித்தவாறு அடிப்படைக் கல்வித் தகைமைகள் இல்லாத, அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் காலத்திற்குள் அடிப்படைக் கல்வித் தகைமையினை அடையத் தவறும் வளநபர்களாகக் கடமையாற்றும் நபர்களைக் குறித்த கடமைகளிலிருந்து விலகிக்கொள்ளுமாறு கட்டளையிட அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறான கட்டளை ஒன்று கிடைக்கப்பெற்ற எந்த வளநபரும் அக் கட்டளையை மீறுதல் இந் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமாகும். தகைமையற்றவர்களை விலக்கல்.

35. ஆரம்பப் பிள்ளை பராயத்தை அடைந்துள்ள பிள்ளைகளின் உடல் மற்றும் உள வளர்ச்சிக்கு பொறுத்த மான வகையில் சேவையில் ஈடுபடுத்த தவறியமை மீது அல்லது 55 வயதை பூர்த்தி செய்ததன் காரணமாக வளவாளர்கள் சேவையில் இருந்து விலகுமாறு அல்லது ஓய்வு பெறுமாறு ஆலோசனை குழுவினால் விதித்தல் வேண்டும்.

36.(1) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்தன்று யாதாயினும் ஒரு நிலையத்தில் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் இந் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறு அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். வளவாளர்களை பதிவு செய்தல்.

(2) அவ்வாறு விண்ணப்பிக்கும் வளநபராக கடமையாற்றும் நபரொருவர் நியதிச் சட்டத்தின் விதிமுறைக்கிணங்க தகுதிகளைப் பூர்த்தி செய்திருந்தால் அதிகாரியினால் அதற்கென பேணப்படுகின்ற ஆவணத்தில் அவ்வாறானவர்களின் விபரங்களைப் பதிவு வைத்தல் வேண்டுமென்பதுடன், அந் நபர் ஒரு வளவாளர் என உறுதிப்படுத்தும் அடையாள அட்டை ஒன்றினையும் வழங்க வேண்டும்.

(3) அதிகாரியிடம் பதிவு செய்துகொள்ளாத யாரொருவரும் எந்த நிலையத்தில் வளவாளராக கடமை புரியக் கூடாது என்பதுடன், அந்த சரத்துக்கு மாறாக நடவடிக்கை மேற்கொள்ளும் ஒருவர் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைப்பவராவார். பதிவு செய்யப் படாமல் வளவாளர் களாக செயற்பட முடியாது.

37. ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்திக் கடமைகளில் ஈடுபடும் வளவாளர்களைப் பயிற்றுவிக்கும் காரியத்தில் ஈடுபடுகின்ற ஊவா மாகாணத்திற்குள் அமைந்துள்ள அனைத்து பயிற்சி நிறுவனங்களும் (தேசிய மட்டத்திலான அரசாங்க நிறுவனங்கள் தவிர) அதிகாரியிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதலை பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறான பதிவுச் சான்றிதலொன்றைப் பெற்றுக்கொள்ளாது அது போன்ற நிறுவனமொன்றை நடாத்திச் செல்லுதல் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமாகும். பயிற்சி நிறுவனங்கள் பதிவு செய்யப்படல் வேண்டும்.

*38.* நிலையங்களின் வளவாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக முறையான செயற்திட்டமொன்று அதிகாரியினால் ஒவ்வொரு வருடமும் தயாரித்து அங்கீகாரத்துக்காக ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

பயிற்சியில் பங்கு கொள்ளாதோரை விலக்கும் உரிமை.

*39.* ஆலோசனை குழுவினால் ஒழுங்கு செய்யப்படும் பயிற்சிகளுக்கு சமுகமளிக்காத வளவாளர்களை நிலையங்களில் சேவையாற்றுவதிலிருந்து விலகிக்கொள்ளுமாறு கட்டளையிடுவதற்கு அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறான கட்டளையைப் பெற்ற வளவாளர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுதல் அல்லது சேவையில் ஈடுபடுத்தப்படுதல் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமாகும்.

பயிற்சியை கட்டாயப்படுத்தல்.

*40.* நிலையங்களின் வளவாளர்கள் ஆலோசனைக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்கேற்ப உரிய பாடநெறிகளை தொடர்ச்சியாக பயில வேண்டும்.

பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல் செய்தல்.

*41.* நிலையங்களிலுள்ள பிள்ளைகளின் பெற்றாரை அறிவுறுத்துவதற்காக ஆலோசனைக் குழுவின் ஆலோசனையுடன் முறையானதொரு திட்டம் அதிகாரியினால் தயாரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

## பகுதி VIII

## பொதுவான விதிமுறைகள்

அமைச்சரினால் கட்டளை பிறப்பிக்க முடியும் என்பது.

*42.(1)* நிர்ணயிக்கப்பட வேண்டுமென இந் நியதிச் சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட கட்டளைகளை விதிப்பதற்கு இந் நியதிச் சட்டத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படக்கூடிய அனைத்து விடயங்கள் சம்பந்தமாயும் அமைச்சரினால் நிபந்தனைகள் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கப்படலாம்.

(2) அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு நிபந்தனையும் அல்லது கட்டளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அக் கட்டளையில் உறுதியாக குறிப்பிடப்படக்கூடிய ஏதாவது பிந்திய திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(3) அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு நிபந்தனையும் அல்லது கட்டளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் இயன்றளவு விரைவில் அங்கீகாரத்துக்காக மாகாண சபையிடம் சமர்ப்பிக்கப்படாத கட்டளை, அவ்வாறு அங்கீகாரம் பெறாத தினத்திலிருந்து குறித்த நிபந்தனையின் அல்லது கட்டளையின் கீழ் முன்னர் ஆற்றப்பட்டு வந்த செயல்களுக்கு அதனால் பாதிப்பு ஏற்படாத வகையில் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) யாதாயினுமொரு நிபந்தனை அல்லது கட்டளை நிராகரிக்கப்பட்டதாக கருதப்படும் திகதி தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

(5) மேலே கூறப்பட்ட (1) சரத்தின் கீழ் அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் நிபந்தனைகள் அல்லது கட்டளைகள் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அவை இந் நியதிச் சட்டத்தின் மூலமாக பிறப்பிக்கப்பட்ட ஒன்றாக வலுப்பெற வேண்டும்.

*43.* அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தண்டனை விதி கோவையின் விதிமுறைகளுக்கும், கடமைகளுக்கும் அமைய அரச ஊழியர்களாக கருதப்படல் வேண்டும்.

*44.* அதிகார சபை இலஞ்ச ஊழல் சட்டமூல விதிமுறையின் கீழ் உப அட்டவணைகளுக்கு இணங்க அதிகார கருதப்பட வேண்டியதுடன் அச் சட்ட மூல ஏற்பாடுகளின் கீழ் கடமையாற்றுதல் வேண்டும்.

*45.* இந் நியதிச் சட்டத்தின் கருமங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமென அமைச்சர் அவர்கள் கருதுகின்ற யாராயினும் ஒருவரின் சேவையை ஒரு குறித்த காலத்திற்கு பெறலாம் என்பதுடன் ஆளுநர் அவர்கள் நிர்ணயிக்கும் ஒரு கொடுப்பனவை அதற்காக அந் நபருக்கு வழங்கலாம்.

நிலையங்களுக்கு வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு.

*46.* ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் அதிகாரியினால் வருடாந்தம் கொடுப்பனவொன்று பதிவு செய்யப்பட்ட நிலையங்களுக்கு வழங்கப்படலாம்.

*47.* ஆளுநர் அவர்களால் அல்லது அமைச்சர் அவர்களால் அல்லது ஆலோசனைக் குழுவினால் அல்லது செயலாளரினால் அல்லது முகாமையாளரினால் அதிகாரிக்கு யாதாயினுமொரு கட்டளை, ஆலோசனை, வழிகாட்டல் மேற்கொள்ளப்பட்டால் அதன்படி செயற்படுவதற்கு அல்லது யாதாயினுமொரு அறிக்கையை அல்லது ஆவணத்தைப் பெற்றுத்தருமாறு கேட்கப்பட்டால் அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரியானவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பகுதி IX

### குற்றங்களும் தண்டனைகளும்

48. இந் நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட நிபந்தனைகள் அல்லது கட்டளைகளை, விதிமுறைகளை மீறுதல், மறுத்தல் அல்லது அந்த விதிமுறைகளுக்கிணங்க செயற்படுத்துவதற்கு அதிகாரமுடைய ஒருவருக்கு தனது தொழிற் கடமைகளை ஆற்றுவதற்கு குந்தகம் விளைத்தல் இந் நியதிச் சட்டத்தின் பிரகாரம் குற்றமாக கருதப்படும். சட்டவிதிகளை மீறுதல் மற்றும் கடமைகளுக்கு இடையூறு பண்ணல்.

49. மேற்படி 48 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு குற்றத்தை இழைப்பவருக்கு நீதவான் முன்னிலையில் நடாத்தப்படும் சிறு வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாக்கப்பட்டால் இலங்கை நாணயப்படி பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது அவ்விரண்டுக்கும் உள்ளாக வேண்டும். குற்றங்களுக்கான தண்டனைகள்.

50. இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்தினை எய்துவதற்காகவோ அதன் கீழ் ஆக்கப்பட்ட நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட ஏதாவது விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவோ கருமங்களை அல்லது காரியங்களை ஆற்றும்போதோ எந்தவொரு நீதிமன்றத்திலும் விபரங்களை முன் வைப்பதற்கு அல்லது சாட்சியமளிப்பதற்கு அதிகாரியானவருக்கு அல்லது அவரினால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவருக்கு இயலுமாதல் வேண்டும். நீதிமன்ற பணிகள்.

51. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களை ஆற்றுகின்ற அல்லது அதற்காக நியமிக்கப்படுகின்ற அல்லது பெயர் குறிப்பிடப்படுகின்ற எவரும் குற்றவியல் தாபனக் கோவையின் விளக்கத்தின் பிரகாரம் ஓர் அரச ஊழியராக கருதப்பட வேண்டும்.

52. இந் நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்துவதோடு ஊவா மாகாணத்தின் 2011 ஆம் ஆண்டின் இல 05 ஆம் இலக்க, ஆரம்ப பிள்ளைப் பருவ நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது நிராகரிக்கப்பட வேண்டும்.

53. விளக்கம் -

ஒரு பதம்/சொல் தொடர்பில் வேறு கருத்தொன்று அவசியப்பட்டால் அன்றி இந் நியதிச் சட்டத்தில் "மாகாணம்" என்ற பதத்தினால், மொணராகலை மற்றும் பதுளை ஆகிய இரு நிர்வாக மாவட்டங்களைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 8 ஆவது பட்டியலில் கூறப்பட்டுள்ளஊவா மாகாணமும்,

"ஆளுநர்" என்ற பதத்தினால், ஊவா மாகாண ஆளுநர் அவர்களும்,

"மாகாண சபை" என்பதால், அரசியல் யாப்பின் XVII அ பந்தியின் 154 அ (1) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஊவா மாகாணத்தின் மாகாண சபையும்,

''உரிய அதிகாரி'' என்பதனால், இந் நியதிச் சட்டத்தின் உரிய அதிகாரியாக முறையாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியும் அவருக்காக கருமமாற்ற முறையாக அதிகாரம் பெற்ற அதிகாரியும்,

"மாகாண சபை அரச சேவை" என்பதனால், 1987 ஆம் ஆண்டின். 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆம் சட்டப்பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மாகாண சபை அரச சேவையும்,

"நிலையம்" என்பதனால் ஐந்து வயதுக்கு குறைவான பிள்ளைகளுக்கு பாதுகாப்பு மற்றும் கல்வி வழங்கும் பகற்பாதுகாப்பு நிலையங்கள், முன் பள்ளிகள் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் உட்பட அப் பிள்ளைகளின் உடல், உள அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்காக தாபிக்கப்பட்டுள்ள நிலையங்களும்.

''முகாமையாளர்கள்'' என்பதனால் நிலையங்களை நடாத்தி செல்கின்ற இணைப்பாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகிகளும்,

''விஷேட பிள்ளைகள்'' என்பதனால் நிலையங்களுக்கு போக வேண்டிய வயதிலுள்ள பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, உடல் ஊனம் உடைய மற்றும் மெதுவாக மனவளர்ச்சி பெறும் பிள்ளைகள் போன்ற விஷேடமான பிள்ளைகளும்.

''நிலையங்களை நடாத்திச் செல்பவர்'' என்பதனால் நிலையங்களை நடாத்திச் செல்லுகின்ற நபர், இணைப்பாளர் அல்லது தொண்டர் நிறுவனம் அல்லது கூட்டுத்தாபன நிறுவனமும்,

''நிர்ணயிக்கப்பட்ட தினம்'' என்பதனால், இந் நியதிச் சட்டம் ஆளுநர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட திகதியும் கருதப்படும்.

ஒவ்வாமை ஏற்படும்போது சிங்கள மொழிச் சொல்லே வலுவுடையதாகும் எனவும்.

54. இந் நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிச் சொற்களுக்கிடையில் யாதாயினும் ஒவ்வாமை காணப்பட்டால், அத்தருணத்தில் சிங்கள மொழிச் சொல்லே வலுவுடையதாதல் வேண்டும்.

07-637

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.